தேதி.11.11.2020



சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்

O.S.No.241/18 பி.வா.சா.2 திருமதி.இந்திரா

பி.வா.சா.2 நீதிமன்ற அனுமதியின் படி திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்து ஆதியில் என் மாமனார் ஆறுமுகம் பெயரில் இருந்தது. அவர் வா.சா.ஆ.3 மற்றும் 4 படி கிரையம் பெற்றிருந்தார் என்றால் ஆமாம். எனக்கு திருமணம் ஆகி 14 ஆண்டுகள் ஆகிறது. என் திருமணத்திற்கு முன்பாக என் மாமனார் ஆறுமுகம் இறந்துவிட்டார். என் கணவருடன் பிறந்தவர்கள் 3 பேர். அவர்கள் மூன்று பெயரும் ஆறுமுகம் சொத்தில் பாகம் வேண்டாம் என்று என் கணவர் பெயருக்கு விடுதலை பத்திரம் வா.சா.ஆ.2 எழுதி கொடுத்துவிட்டார்கள். அந்த விடுதலை பத்திரம் அடிப்படையில் என் கணவர் வாதிக்கு கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அடமானம் தான் எழுதி கொடுத்தார். பிரதிவாதியும், நானும் 10ம் வகுப்பு படித்துள்ளோம். பொதுவாக பத்திரம் கையெழுத்து செய்யும் முன்பாக படித்து பார்த்துதான் கையொப்பம் செய்வார்கள் என்றால் ஆமாம். தாவா கிரைய ஆவணமும் கிரையமாகதான் எழுதப்பட்டது என்றாலும் அதில் நானும் என் கணவரும் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. அடமானம் தான் எழுதி கொடுத்தோம். வா.சா.ஆ1 கிரைய ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். வா.சா.ஆ1-ல் மற்றொரு சாட்சியாக சுந்தரம் என்பவர் கையொப்பம் செய்துள்ளார். அவரை எனக்கு தெரியாது என் கணவருக்கு தெரியும். பத்திரம் பதிவதற்கு முன்பாக சார்பதிவாளர் கிரையத்தை பொறுத்து எழுதி கொடுக்கும் நபரிடம் விசாரித்து தான் பத்திரத்தை பதிவார் என்றால் என் கணவரிடம் எதுவும் கேட்கவில்லை. வா.சா.ஆ.1 கிரையமாகதான் எழுதப்பட்டது என்றாலும் விசாரித்துதான் சார்பதிவாளர் பதிந்தார் என்றாலும் அடமானமாக எழுதப்படவில்லை

என்றாலும், கிரைய பற்றி தெரிந்து நானும் என் கணவரும் கையொப்பம் செய்தோம் என்றாலும் சரியல்ல. கிரைய உடன்படிக்கையோ, அடமானமோ எழுதினால் மூல ஆவணங்களை கொடுக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. பழனிச்சாமிக்கு கிரையமாக கொடுத்ததால் தான் வா.சா.ஆ.3 மற்றும் 4 மூல பத்திரங்களை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. அடமானம் எழுதி கொடுத்து 4 ஆண்டுகள் ஆகிறது. ரூ.5,00,000/-ற்கு வாதிக்கு 2, 3 ஆண்டுகள் வட்டி கொடுத்தோம். மாதம் மாதம் வட்டி ரூ.20,000/- கொடுத்தோம். வட்டிக்கு ரசீது எதுவும் வாங்கவில்லை. அசல் தொகை கொடுக்க முயற்சி செய்தோம் தொழில் நஷ்டம் அடைந்ததால் கொடுக்கமுடியவில்லை. எழுத்து பூர்வமாக வாதிக்கு எதுவும் கொடுக்கவில்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் வரை என்ன ஆவணம் எழுதி கொடுத்தோம் என்று தெரிந்து கொள்ளவில்லை. கிரைய ஆவணம் எழுதி 6 மாதம் கழித்து வீட்டு வரி செலுத்த போன போதுதான் என் கணவருக்கு கிரைய ஆவணம் எழுதிய விவரம் தெரியவந்தது. அதன் பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். கிரைய ஏற்பட்ட தினத்தில் இருந்து 2018-ம் ஆண்டு வரை வாதி மீது எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையாலும் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்ததால் தான் வாதி மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் வீட்டின் மின் இணைப்பு என் கணவர் பெயரில்தான் உள்ளது. மின் இணைப்பு வாதி பெயருக்கு மாறாததால் என் கணவர் பெயரில் மின்கட்டணம் செலுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. வாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டு தற்பொழுது வழக்கிற்காக அடமானம் என்று பொய்வாதம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி வழக்கு சொத்தில் இருந்து 2 கி.மீ தொலைவில் வசிக்கிறார். கிரையத்திற்கு பிறகு வாதி தாவா சொத்தில் உள்ள வீட்டை பூட்டிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. கிரையம் ஆன பிறகு தற்பொழுது தாவா சொத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தை அக்கிரமாக அடையவேண்டும்

என்பதற்காக 03.12.2018-ல் மாவட்ட காவல் துறையில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. பொய் புகார் கொடுத்து விட்டு வீட்டின் பூட்டை உடைத்துவிட்டு அதில் வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவாபடி தீர்வாக வேண்டுமென்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒ/ம்.திருமதி.இந்திரா DW2

ஒ/ம். P. ஈஸ்வரமூர்த்தி
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.